**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**

**சி.சி. 186/2019**

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 12வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. கீதா (ஜெராக்ஸ் ஆபரேட்டர்) என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதிஷ்குமார் | வயது | 23 |
| த.பெ.(அ)க.பெ. | ராஜகோபால் | தொழில் | மணப்புரம் கோல்டு |
| ஊர் | பாப்பானூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

நான் பாப்பானூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மணப்புரம் கோல்டு நிறுவனத்தில் பணிபுரிகிறேன். விபத்தில் இறந்துபோன தமிழ்செல்வன், நிதிஷ்குமார் இருவரையும் தெரியும். தமிழ்செல்வன் எனது பெரியப்பா மகன். நிதிஷ்குமார் எனது நண்பர். 08.05.2018 அன்று காலை நிதிஷ்குமார் இருசக்கர வாகனத்தை ஓட்ட தமிழ்செல்வன் பின்னால் அமர்ந்து கொண்டு திருப்பத்தூர் டு ஆலங்காயம் சாலை ஜொல்லனூர் என்ற இடத்திற்கு சென்று கொண்டிருந்த போது அவர்கள் மீது லாரி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக போன் முலம் தகவல் வந்தது. அப்போது நான் வீட்டில் இருந்தேன. உடனடியாக நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். பாப்பானூர்மேடு என்ற இடத்தில் நடந்திருந்தது. இருசக்கர வாகனத்தில் சென்ற இருவரும் சம்பவ இடத்தில் இருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தது. நிதிஷ்குமார் சுயநினைவின்றியும், தமிழ்செல்வன் ஒரளவு சுயநினைவுடன் இருந்தார்கள். அப்போது நான் ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். லாரி ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எனக்கு விபத்து எப்படி ஏற்பட்டது என்று நேரடையாக தெரியாது என்றால் சரிதான். யாருடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை